நாகப்பட்டினம் நகராட்சி

**2024–ஆ–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 22 –ம் நாள் வியாழன் கிழமை காலை 10.00 மணியளவில்**
**நடைபெற்ற நகரமன்ற சாதாரண கூட்ட நடவடிக்கையின் தீர்மான நகல்**

| கூட்ட நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்ட பொருள்களின் விபரம் | தீர்மான எண் |
|---|---|---|
| 22-02-2024 | பொருள் எண்.1<br>➢ சிலப்பதிகாரத்தில் மணிமேகலையின் கையின் இருந்த அட்சய பாத்திரம் மாண்புமிகு தமிழக முதல்வர் தளபதியின் நிதி அமைச்சருக்கு கிடைத்து உள்ளதாகவே அறியமுடிகிறது.<br>➢ சமூக நீதியும் சமுத்துவம் நிலை நாட்டபடும் நிதிநிலை அறிக்கையை மனதாரபாரட்டி இம்மன்றத்தின் வாயிலாக பதிவு செய்கிறேன். என்றுமே கல்வியில் சிறந்த தமிழ்நாடு என்பதை மெய்பிக்கும் வகையில் பெண் கல்வியை ஊக்குவிக்கும் புதுமை பெண்திட்டம். மாணவர்களின் இடைநிறுத்தத்தை தவிர்க்க தமிழ் புதல்வன்திட்டம் இவைகள் எதிர்கால முதலீடுகள்.<br>➢ 1970 களில் குடிசை மாற்று வாரியம் கண்டார் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் தமிழக முதல்வர் தளபதியோ குடிசையில்லா தமிழகம் என்ற இலக்கை நோக்கி பயணிக்கிறார். வறுமை ஒழிப்பு என்பதை முழுக்கமாக இல்லாமல் சமய குருவர் தாயுமானவர் பெயரில் திட்டமான அறிவித்து உள்ளது பெருமைக்குரியது.<br>➢ மாற்று திறனாளிகள் அதிலும் குறிப்பாக ஆட்டிசம் நோய் குறைபாடுள்ளவர்கள்கான உயர்திறன் மையம் என்பது சமூக அக்கறைக்கு எடுத்துகாட்டு,<br>➢ பட்ஜெட் அனைவரையும் சென்றடையும் என்பது உள்ளகை நெல்லிகனி என்பது மிகையாகது எப்படி முத்துமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அறிமுகபடுத்திய பொது விணியோக திட்டம் உலகளவில் பேசும் பொருளானதோ அதேபோல் இந்த பட்கெட் சர்வேதேச பொருளாதார நிபுணர்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் உள்ளது.<br>அனைவருக்கும்மான அரசாக பீடுநடைபோடும் மாண்புமிகு தமிழக முதல்வர் தளபதி தலைமையிலான அரசையும் மாண்புமிகு நிதிஅமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களையும் இந்த மன்றத்தின் சார்பாக பாரட்டி நன்றி தெரிவித்து மகிழ்கிறேன் | தீர்மானம் எண். 24<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 22-02-2024 | பொருள் எண்.2<br>நாகப்பட்டினம் நகராட்சியின் 2023-2024 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடும் 2024-2025 ஆம் ஆண்டிற்கான உத்தேச திட்ட மதிப்பீடு வரவு செலவு அறிக்கை தயார் செய்பட்டுள்ளதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br><br>அலுவலககுறிப்பு \| 1 \| மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். 613 /2022/பி1 | தீர்மானம் எண். 25<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 22-02-2024 | பொருள் எண்.3<br>இந்நகராட்சியில் பல்வேறு திட்டப்பணிகள் நாளது தேதிவரை சிறப்புடன் மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில் அனைத்து பிரிவுகளிலும் தட்டச்சு, புள்ளிவிபரக் குறிப்புகள் மற்றும் பிறப்பு, இறப்பு பதிவுகள் தினந்தோறும் இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டியுள்ளதால் 3 தட்டச்சர் பதவி மற்றும் புள்ளிவிவரக் குறிப்பாளர் பதவி நாளது தேதிவரை காலியாக உள்ள நிலையில் பணியின் அவசர அவசியத்தைக்கருதி முழுவதும் ஒப்பந்த அடிப்படையில் (outsoursing) மாவட்டஆட்சித்தலைவரின் செயல்முறை ஆணை ந.க.எண்.6721/2023/ஈ1, நாள்:20.06.2023-இல் நிர்ணயம் செய்யப்பட்ட விலை விகிதத்தின்படி, நாள் ஒன்றுக்கு ஒரு தினக்கூலி பணியாளருக்கு ரூ.500 வீதம் 9 தினக்கூலி தட்டச்சர்களுக்கு ஊதியம் வழங்கவும், இந்நகரமன்றம் தனது 12.12.2023 ஆம் தேதிய தீர்மானம் எண்.321 இல் அனுமதி வழங்கியதன் அடிப்படையில் நாளது தேதிவரை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிகழ்வுகளில் எதிர்வரும் பாராளுமன்ற தேர்தல் நடைமுறை விதிகள் விரைவில் அறிவிக்கப்படவுள்ளதால் புதிய ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு போதிய காலஅவகாசம் இல்லாத நிலையில் பணியின் அவசர அவசியத்தை கருத்தில் | தீர்மானம் எண். 26<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | கொண்டு உத்தேச செலவினத்தொகை ரூ.8.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கண்ட பணியின் கால அவகாசத்தை 01.04.2024 ஆம் தேதி முதல் 30.09.2024 ஆம் தேதிவரை நகராட்சி பொது நிதியில் தொடர்ந்த ஒருவருடத்திற்கு பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு — 1 — மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். 4765/2023/எச்1 | |
| 22-02-2024 | பொருள் எண்.4<br>நாகப்பட்டினம் நகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அரசு மற்றும் நகராட்சி பள்ளிக்கழிப்பறைகளை நகராட்சியின் கல்விநிதியில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளதை தொடர்ந்து அரசு ஆணை (நிலை)77, நாள்:13.04.2015-இன்படி, ஒப்பந்தப்புள்ளி நடைமுறைகளைப் பின்பற்றி 31.01.2024 ஆம் தேதி வரை பணிகள் மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதி பெற்று தனியார் நிறுவனத்தாரால் (Full Contract Basis) 23 தினக்கூலி தூய்மைப்பணியாளர்களைக் கொண்டு பராமரிப்பு பணிகள் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் புதிய ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு போதிய கால அவகாசம் இல்லாத நிலையில் ஆணையர் மற்றும் நகரமன்றத்தலைவரின் அறிவுரைகளின்படி தொடர்புடைய ஒப்பந்தக்காரர் M/S.ரேன்ஸ் இன்ஜினியரிங் நிறுவனத்தரால் கொடுக்கப்பட்டுள்ள சம்மத கடிதத்தில் ஏற்கனவே கொடுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தின்படி நாள் ஒன்றுக்கு ரூ.385 வீதம் தொடர்ந்து 6 மாதங்களுக்கு பணிகள் மேற்கொள்ளவும், அதற்கு உண்டான உத்தேச தொகை ரூ.16.00 இலட்சத்தில் கல்விநிதியில் பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் பணியின் அவசர அவசியத்தை கருதி நகர்மன்ற தலைவரின் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதையும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு — 1 — மன்றம் அனுமதிக்கலாம்<br>2 — பணியின் அவசர அவசியத்தை கருதி நகர்மன்ற தலைவரின் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>ந.க.எண். 41/2020/எச்1 | தீர்மானம் எண். 27<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 22-02-2024 | பொருள் எண்.5<br>நாகப்பட்டினம் நகராட்சியில் பாராளுமன்ற மக்களவை உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டு திட்டம் 2023-2024ன் கீழ் நாகப்பட்டினம் நாடாளுமன்ற மக்களவை உறுப்பினர் திரு.எம்.செல்வராஜ் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்ட பணியான வார்டு எண் 20 பொது விநியோக கடை கட்டிடம் கட்டுதல் பணிக்கு மதிப்பீடு ரூ.12.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டப்பணிக்கு நகராட்சியின் மூலம் ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் முன்மொழிவுகள் தயார் செய்யப்பட்டு கூடுதல் ஆட்சியர் ( வளர்ச்சி) மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகப்பட்டினம் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டப்பணியினை மேற்கொள்ள ரூ.12.00 இலட்சம் மட்டுமே பரிந்துரை செய்யப்பட்டுள்ளதால் கூடுதல் தொகை ரூ.3.00 இலட்சத்தினை நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிவேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு — 1 — மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந. க.எண். 4556/2023/இ1 | தீர்மானம் எண்.28<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 22-02-2024 | பொருள் எண்.6<br>நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2021-2022ன் கீழ் புதிதாக கட்டப்பட்டுள்ள நூலகம் மற்றும் அறிவுசார் மையத்திற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.27968/2022/பி1 நாள்.09,01,2024 ன்படி கீழ்காணும் தினசரி செய்தி தாள்கள் மற்றும் நாளிதழ்கள் விநியோகம் செய்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது.<br>News Papers — Time of India. Hindu Tamil Thisai and Employment News (Weekly)<br>Magazines — Competitions success Review (CSR)CSR (G.K) Yojana, Thittam ( திட்டம்) Kurukshetra.<br>மேற்கண்ட தினசரி செய்தித்தாள்கள் மற்றும் நாளிதழ்கள் விநியோகம் செய்வதற்குண்டான தொகையினை மாதந்தோறும் வழங்கப்படும் பட்டியல் தொகைக்கேற்ப வழங்கிடவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு — 1 — மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 — மேற்கண்ட தினசரி செய்தித்தாள்கள் மற்றும் நாளிதழ்கள் விநியோகம் செய்வதற்குண்டான தொகையினை | தீர்மானம் எண்.29<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம். | |
| | ந.க.எண். 4003/2021/இ1 | | | |
| 22-02-2024 | பொருள் எண்.7<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.4 காட்டுப்பள்ளி குளத்தெரு, பட்டினச்சேரி , மேலப்பட்டினச்சேரி ஆகிய பகுதிகளில் உள்ள மக்கள் பிரதான தொழிலான மீன்பிடி தொழிலுக்கு செல்லும் சாலைகளில் தெருவிளக்குகள் இல்லாத காரணத்தினால் விசஜந்துக்களின் நடமாட்டம் அதிகரித்து உள்ளதனை தவிர்ப்பதற்காக புதிய மின் இணைப்புகளுடன் கூடிய தெருவிளக்குகள் அமைத்து தர நகர்மன்ற உறுப்பினரால் கடிதம் வழ ங்கப்பட்டுள்ளது. அதனைத்தொடர்ந்து மேற்காணும் பொருள் தொடர்பாக நேராய்வு செய்யப்பட்டதனை தொடர்ந்து தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலம் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.4.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | | | தீர்மானம் எண்.30<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| | அலுவலககுறிப்பு | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம் | |
| | | 2 | மேற்கண்ட பணியினை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம். | |
| | ந.க.எண். 5325/2023/இ1 | | | |
| 22-02-2024 | பொருள் எண்.8<br>நாகப்பட்டினம் மாவட்ட அளவிலான அலுவலர்கள் ஆய்வு கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நாகப்பட்டினம் மாவட்டத்தின் சார்பாக பசுமை திட்டத்தின் கீழ் மரக்கன்றுகள் நடுவதற்கு அறிவுறுத்தப்பட்டது. அதனைத்தொடர்ந்து நாகப்பட்டினம் நகராட்சியின் சார்பாக நகர்பகுதியில் முழுமையாக மரக்கன்றுகள் நடுவதற்கும் மற்றும் மரக்கன்றுகள் வாங்கிடவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | | | தீர்மானம் எண். 31<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| | அலுவலககுறிப்பு | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம். | |
| | | 2 | மேற்காணும் பணியினை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம். | |
| | ந.க.எண். /2024/இ1 | | | |
| 22-02-2024 | பொருள் எண்.9<br>அரசாணை எண்.78/2017 நாள் 4.5.2017 மற்றும் அரசாணை எண் 172/2017 நாள் 13.10.2017 அரசாணைகளின்படி வரன் முறைப்படுத்தப்பட்ட நாகப்பட்டினம் நகரம் வார்டு எண் 4, பிளாக் எண்3,4, புல எண்கள் 62/1, 91/1A, 92/1, 93/1, 90/2A , 83, 86, 121 , 89/2, 116, 117, 118, 120, 90/2, 114, 102, 103, 104, 105, 109, 101, 100, 102/1, 112/2, 113, 96/1A,, 59/2b, 104 293 ஆகிய புல எண்களில் அடங்கியுள்ள வரைபடத்தில் கண்டுள்ள நீளம் மற்றும் அகலங்களின்படி 11455.3 ச.மீ பரப்பளவில் உள்ள சாலைகளை நகராட்சிக்கு தானமாக ஒப்படைக்க அனுமதி கேட்டு வரப்பெற்ற மனைப்பிரிவு உரிமையாளர்கள் திருவாளர்கள். மீரா உசேன், ஜாகீர் உசேன், ரங்கசாமி, பரிதா ஆகியோர் மற்றும் அப்பகுதியில் குடியிருப்போர் நல சங்கத்தினர் கோரியுள்ளனர். தமிழ்நாடு அரசு நகர ஊரமைப்புத்துறையின் அரசாணைகளின்படி 20-10-2016 க்கு முன்னர் அமைக்கப்பட்ட மனைப்பிரிவு என்பதால் அம்மனைப்பிரிவில் பலர் தனிமனைகளை முறைப்படுத்தி நகர ஊரமைப்பு துணை இயக்குனர் தஞ்சாவூர்அவர்களின் எஸ்.பி.எப்.எண். 1793/2018 மற்றும் நகர ஊரமைப்பு துணை இயக்குனர் நாகப்பட்டினம் அவர்களின் எஸ்.பி.எப்.எண். 12/2021 ஆகிய உத்தரவுகளின்படி முறைப்படுத்தி உள்ளனர், எனவே இம்மனைப்பிரிவிற்கு இடையே உள்ள சாலைகளை நகராட்சிக்கு தானமாக ஏற்க மன்றத்தின் ஒப்புதலுக்கு. | | | தீர்மானம் எண். 32<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| | அலுவலககுறிப்பு | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம் | |
| | | 2 | மேற்படி சாலையை நகராட்சி ஆணையர் பெயரில் தானமாக பத்திர பதிவு செய்ய சார் பதிவாளர் நாகூர் அவர்களுக்கு வரைவு எழுதலாம் | |
| | ந.க.எண். 3685/2023 எப்.1 | | | |

| | | |
|---|---|---|
| 22-02-2024 | பொருள் எண்.10<br>நாகப்பட்டினம் இரயில் நிலையம் எதிரில் தமிழ்நாடு அரசால் அரசு சார்பில் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் தமிழ்திரு மறைமலை அடிகளார் சிலை நிறுவப்பட்டுள்ளது. மேற்படி இடத்தில் அருகில் இரயில்வே மேம்பாலம் அமையவுள்ளதால் பூர்வாங்க பணிகள் நடைபெற்றுவருகிறது. எனவே மறைலைஅடிகளார் சிலை அங்கிருந்து அகற்றி நகராட்சிக்கு சொந்தமான வெளிப்பாளையம தம்பிதுரை பூங்கா முன்பாக நிறுவி நகராட்சி மூலம் பராமரிக்க உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சம் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2 நகர ஊரமைப்பு துறையில் வளர்ச்சி நிதியிலிருந்து (Development Charge) மேற்படி செலவினம் மேற்கொள்ளலாம்<br>ந.க.எண். 2426/2020/ எப்.1 | தீர்மானம் எண்.33<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 22-02-2024 | பொருள் எண்.11<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட நாகப்பட்டினம் மேல கோட்டைவாசல் பகுதியில் உள்ள உரக்கிடங்கில் பொருள் மீட்பு மையம் (MRF) பணியில் கூடுதல் பணிகளான தடுப்பு சுவர் கொண்டு அறைகள் அமைப்பதற்கும், கட்டிடத்தில் கம்பி வேலி அமைத்தல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளவதற்கு ஆகும் உத்தேச செலவினத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.6.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்கண்ட பணியினை மேற்கொள்வதற்கு ஆகும் உத்தேச செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். /2024/ இ1 | தீர்மானம் எண்.34<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 22-02-2024 | பொருள் எண்.12<br>நாகப்பட்டினம் நகராட்சி நாகூர் உரக்கிடங்கில் பொருள் மீட்பு மையம் (MRF) பணியில் கூடுதல் பணிகளான தடுப்பு சுவர் கொண்டு அறைகள் அமைப்பதற்கும், கட்டிடத்தில் கம்பி வேலி அமைத்தல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளவதற்கு ஆகும் உத்தேச செலவினத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.6.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்கண்ட பணியினை மேற்கொள்வதற்கு ஆகும் உத்தேச செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்., /2024/ இ1 | தீர்மானம் எண்.35<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 22-02-2024 | பொருள் எண்.13<br>நாகப்பட்டினம் நகராட்சி மூலம் புதிதாக கட்டப்பட்டுள்ள ஆசாத் மார்க்கெட் கட்டுமான பணியில் கூடுதல் பணிகளான பேவர் பிளாக் அமைத்தல், பாதாளசாக்கடை இணைப்பு குழாய் அமைத்தல் மற்றும் மின் பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.7.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்கண்ட பணியினை மேற்கொள்வதற்கு ஆகும் உத்தேச செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்., /2024/ இ1 | தீர்மானம் எண்.36<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 22-02-2024 | பொருள் எண்.14<br>நாகப்பட்டினம் நகராட்சி நாகூர் சம்பா தோட்டம் பகுதிகளுக்குரிய கடற்கரை முடுக்கு சாலையில் உள்ள சுடுகாட்டிற்கு சாலை வசதி இல்லாததால், புதிதாக சிமெண்ட் சாலை அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம் | தீர்மானம் எண்.37<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | 2 மேற்கண்ட பணியினை மேற்கொள்வதற்கு ஆகும் உத்தேச செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். /2024/ இ1 | |
| 22-02-2024 | பொருள் எண்.15<br>நாகப்பட்டினம் நகராட்சி நாகூர் பகுதியில் கிழக்கு கடற்கரை சாலை அருகில் அமைந்துள்ள சுடுகாட்டிற்கு சாலை வசதி இல்லாததால், புதிதாக சிமெண்ட் சாலை அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.13. 00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்கண்ட பணியினை மேற்கொள்வதற்கு ஆகும் உத்தேச செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். /2024/ இ1 | தீர்மானம் எண்.38<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 22-02-2024 | பொருள் எண்.16<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1ல் உள்ள சிவன் மேல மடவிளாகம் பகுதியில் குடிநீர் விநியோகம் சரிவர வாராத காரணத்தினால் அப்பகுதி பொதுமக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின்படி குடிநீர் பற்றாக்குறையினை தவிர்க்கும் நோக்கில் 4 அடி விட்டம் கொண்ட குடிநீர் குழாய் புதியதாக அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.1.25 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்கண்ட பணியினை மேற்கொள்வதற்கு ஆகும் உத்தேச செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். /2024/ இ1 | தீர்மானம் எண்.39<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 22-02-2024 | பொருள் எண்.17<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்டநாகப்பட்டினம் உரக்கிடங்கு, அரசு தலைமை மருத்துவமனை பின்புறம் உள்ள நுண்ணுயிர் குடில், நாகூர் உரக்கிடங்கில் உள்ள எம்.சி.சி-ல் உள்ள இயந்திரங்கள் பழுதடைந்து குப்பைகளை தரம்பிரிக்க இயலாத நிலையில் உள்ளதால் பொதுசுகாதார நலனை கருத்தில் கொண்டு இயந்திரங்களை பழுது நீக்கம் செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்கண்ட பணியினை மேற்கொள்வதற்கு ஆகும் உத்தேச செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். /2024/ இ1 | தீர்மானம் எண்.40<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 22-02-2024 | பொருள் எண்.18<br>நாகப்பட்டினம் நகராட்சிக்கு சொந்தமான புதுத்தெரு தொடக்கப்பள்ளியில் உள்ள கட்டிடங்கள் தட்டு ஓடு சேதமடைந்து மழைகாலங்களில் கசிவு ஏற்படுகிறது. மற்றும் மேடை சேதமடைந்து உள்ளது. அதனை அப்புறப்படுத்தி புதியதாக கட்டுவதற்கும் மேற்படி பள்ளி கட்டிடத்தை வர்ணப்பூச்சு செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்கண்ட பணியினை மேற்கொள்வதற்கு ஆகும் உத்தேச செலவினத்தை நகராட்சியின் கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். , /2024/ இ1 | தீர்மானம் எண்.41<br>அ.கு.அனுமதிக்கப்பட்டது |

22-02-2024

பொருள் எண்.19

நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட தாமரைகுளம் சுற்றி நடைபாதை பகுதியில் உள்ள எட்டுமின் கம்பங்களுக்கு UG CABLE அமைத்து விளக்குகள் அமைக்க தயாரி செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.4.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அலுவலககுறிப்பு | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம் |
| | 2 | மேற்கண்ட பணியினை மேற்கொள்வதற்கு ஆகும் உத்தேச செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம். |

ந.க.எண். , /2024/ இ1

தீர்மானம் எண்.42
அ.கு.அனுமதிக்கப்பட்டது

22-02-2024

பொருள் எண்.20

நாகப்பட்டினம் நகராட்சியில் பொதுநிதி, குடிநீர் நிதி மற்றும் பாதாளச்சாக்கடை நிதியில் கீழ்காணும் பணிகளுக்கு 15.02.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை ரூ .இலட்சத்தில் | ஒப்பந்த நிறுவனங்களின் விவரம் | மதிப்பீட்டு விலைவிகிதம் குறைவு | மதிப்பீட்டு விலைவிகிதம் அதிகம் |
|---|---|---|---|---|---|
| 1. | வார்டு எண்.1 முதல் 18 வரையுள்ள குடிநீர் பகிர்மான குழாய் கசிவு மற்றும் பாதாள சாக்கடை கழிவுநீர் குழாய் கசிவுகளை சீர்செய்யும் பணி | 4.50 | திரு.பி.சிவசக்தி நாகப்பட்டினம் | 0,05 | -- |
| | | | எஸ்.சத்யநாராயணன் நாகப்பட்டினம் | --- | 1.10 |
| 2 | வார்டு எண்.19 முதல் 36 வரையுள்ள குடிநீர் பகிர்மான குழாய் கசிவு மற்றும் பாதாள சாக்கடை கழிவுநீர் குழாய் கசிவினை சீர்செய்யும் பணி | 4.50 | திரு.பி.சிவசக்தி நாகப்பட்டினம் | 0.06 | -- |
| | | | எஸ்.சத்யநாராயணன் நாகப்பட்டினம் | -- | 1.10 |
| 3 | நாகப்பட்டினம் நகராட்சிக்கு ஒடாச்சேரி, குருக்கத்தியிலிருந்து வரும் குடிநீர் பிரதான குழாய்களில் ஏற்படும் உடைப்பினை சீர்செய்யும் பணி | 4.50 | திரு.பி.சிவசக்தி நாகப்பட்டினம் | 0.05 | -- |
| | | | எஸ்.சத்யநாராயணன் நாகப்பட்டினம் | -- | 1.20 |
| 4 | நாகப்பட்டினம் பழந்தெருவில் புதிதாக கட்டப்பட்டுள்ள நகர்புற ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடத்திற்கு பாதாளச்சாக்கடை இணைப்பு, | 1.00 | எஸ்.சொக்கலிங்கம் நாகப்பட்டினம் | 0.05 | -- |
| | | | பி.ரகுநாதன் நாகப்பட்டினம் | -- | 1.10 |

தீர்மானம் எண்.43
அ.கு.அனுமதிக்கப்பட்டது

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | குடிநீர் இணைப்பு மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளுதல் | | | | |
| 5 | நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட நாகூர் மற்றும் நாகப்பட்டினம் பகுதியில் குடிநீர் விநியோகத்திற்கு பயன்படுத்தப்பட்டு வரும் 13 மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளை அவ்வப்பொழுது சுத்தம் செய்தல், குடிநீர்பகிர்மான வால்வுகளில் ஏற்படும் கசிவுகளை சீர்செய்தல் மற்றும் இதர பணிகள் | 3.00 | திரு.பி.சிவசக்தி நாகப்பட்டினம் | -- | 1.10 |
| | | | கே.கோபாலகிருஷ்ணன் நாகப்பட்டினம் | 0.03 | -- |
| 6 | வார்டு எண்.36 டாடா நகர் சுனாமி குடியிருப்பு பகுதியில் மழைநீர் தேங்காத வண்ணம் சிமெண்ட் தளம் அமைக்கு பணி | 5.00 | திரு.பி.சிவசக்தி நாகப்பட்டினம் | 0.05 | -- |
| | | | எஸ்.சத்யநாராயணன் நாகப்பட்டினம் | -- | 0.90 |
| 7 | நாகப்பட்டினம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள பாரதி மார்க்கெட் அங்காடி கட்டிடத்தில் கூடுதல் பணிகள் மேற்கொள்ளும் பணி | 2.00 | திரு.பி.சிவசக்தி நாகப்பட்டினம் | -- | 1.10 |
| | | | எஸ்.சத்யநாராயணன் நாகப்பட்டினம் | 0.03 | -- |
| 8 | வார்டு எண்.20 பெருமாள் மேல வடம்போக்கி தெருவில் இணைப்பு சிறுபாலம் அமைக்கும் பணி | 1.10 | கே.கோபாலகிருஷ்ணன் நாகப்பட்டினம் | 0.06 | -- |
| | | | திரு.பி.சிவசக்தி நாகப்பட்டினம் | -- | 1.20 |
| 9 | பாதாளச்சாக்கடை கழிவுநீர் நீரேற்று நிலையங்கள் மற்றும் Manhole | 5.00 | திரு.பி.சிவசக்தி நாகப்பட்டினம் | 0,05 | -- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | களில் அதிகப்படியான வண்டல்மண் படிந்துள்ளதால் பொது சுகாதாரக்கேடு விளைவிக்கிறது அதனை தடுக்கும் பொருட்டு சேகரமாகியுள்ள வண்டல் மண்ணை அகற்றும் பணி | | ஜி.தேவராஜ் நாகப்பட்டினம் | -- | 1.50 |
| 10 | நாகப்பட்டினம் ஆயுதப்படை காவலர் குடியிருப்பு வளாகம் பகுதியின் Manhole லிருந்து புதிதாக பைப் லைன் அமைக்கும் பணி | 5.00 | திரு.பி.சிவசக்தி நாகப்பட்டினம் | 0.06 | -- |
| | | | கே.கோபாலகிருஷ்ணன் நாகப்பட்டினம் | -- | 1.20 |
| 11 | நாகப்பட்டினம் அறிவுசார் மையம் மற்றும் நூலக கட்டிட வளாகத்தில் உள்ள சாலையினை இணைக்கும் இணைப்பு சாலையில் பேவர் பிளாக் அமைக்கும் பணி | 8.90 | திரு.ஜே.ஜேசு நாகப்பட்டினம் | 0.02 | -- |
| | | | கே.ராஜேந்திரன் நாகப்பட்டினம் | -- | 1.20 |
| 12 | நாகப்பட்டினம் பாதாளச்சாக்கடை கழிவுநீர் சுத்தகரிப்பு நிலையத்தினை வெளிக்கொணர்வு பணியாளர்கள் மூலம் இயக்குதல் பணிக்கு தொழில்நுட்ப தகுதி உடைய / தகுதியற்ற பணியாளர்கள் (7 நபர்கள்) விநியோகம் செய்தல் | 10.00 | மெர்சஸ். டெல்டா இன்ஜினியரிங் சர்வீஸ் நாகப்பட்டினம் | -- | 1.20 |
| | | | எஸ். சத்யநாராயணன் நாகப்பட்டினம் | 0.10 | -- |

மேற்காணும் பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அலுவலகக்குறிப்பு | | மன்றம் அனுமதி வழங்கலாம் |
| | | மேற்காணும் பணிகளுக்கு வரப்பெற்ற குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம். |

ந.க.எண். 38/2023/இ1

22-02-2024

பொருள் எண்.21

நாகப்பட்டினம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில், அரசாணை எண். (2டி) 237 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (நநி3) நாள். 11.02.2007 மற்றும் அரசாணை எண். (டி) 132 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (நநி2) நாள். 28.02.2011 ன்படி தொகை ரூ. 79.31 கோடிக்கு பாதாள சாக்கடை திட்டத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. இதில் மேற்கண்ட திட்ட மதிப்பீட்டில் பொது மக்களுடைய பங்களிப்பு தொகையாக (வைப்பு தொகை மூலம்) ரூ.11.94 கோடியை வசூல் செய்து பணியினை முழுஅளவில் நிறைவேற்றிட ஆணை வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து இந்நகர்மன்ற தீர்மான எண்.638 நாள்.29.11.2007 மற்றும் 64 நாள்.25.02.2010 -ன்படி பொதுமக்களிடம் பாதாள சாக்கடை திட்டத்திற்கு வைப்புத்தொகை அவ்வப்போது தொடர்ச்சியாக பெறப்பட்டுள்ளது. மேற்படி திட்டம் முடிக்கப்பட்டு 2017-ம் ஆண்டு முதல் கட்டிடங்களுக்கு இணைப்பு வழங்க ஆரம்பிக்கப்பட்டது. இதில், கீழ் கண்ட வரிவிதிப்புதாரர்களுக்கு பாதாள சாக்கடை கழிவு நீர், இணைப்பு வழங்கப்படாமல் கேட்பு மட்டும் எழுப்பப்பட்டு வசூலிக்க இயலாத நிலையில் உள்ளது. இவ்வாறு தவறாக கேட்பு எழுப்பப்பட்டுள்ளதாக வந்த மனுக்களின்மீது ஆய்வு செய்யப்பட்டு கீழ்க்கண்ட விபரப்படியான வரிவிதிப்புதாரர்களுக்கு பாதாளசாக்கடை கட்டணம் தொகை ரூ. 43740/- யை மட்டும் கேட்பிலிருந்து நீக்கம் (Write off) செய்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | கோப்பு எண் மற்றும் தேதி | விண்ணப்பதாரர் பெயர் மற்றும் முகவரி | வருடம் | நீக்கம் செய்யப் படும் தொகை | சொத்து வரி எண் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 031 | 004990/2023 | இராமநாதன் 8, பட்டு நூல்காரத்தெரு, நாகப்பட்டினம் 9442705315 | 2016-2017 2023-2024 | 8500 | 098/031/900209 |
| 2 | 030 | 005104/2023 22/12/2023 | ஜீலைகா நாச்சியார் 22,அலியா மறைக்காயர், நாகப்பட்டினம் 9524583232 | 2020-2021 2023-2024 | 4800 | 098/030/900694 |
| 3 | 019 | 005297/2023 28/12/2023 | பழனிவேல், பென்னப்பிள்ளை தெரு, நாகப்பட்டினம் 9442027726 | 2020-2021 2023-2024 | 4180 | 098/019/900824 |
| 4 | 008 | 000113/2024 04/01/2024 | ரவிச்சந்திரன் 2,குயவர் தெரு, நாகூர்(6381527062) | 2022-2023 2023-2024 | 2400 | 098/008/900216 |
| 5 | 001 | 000073/2024 02/01/2024 | ரஹமத் நிஷா 47/50, சிவன் வடக்கு வீதி, நாகூர்(9659171035) | 2023-2024 | 1200 | 098/001/900311 |
| 6 | 016 | 5296/2023 28/12/2023 | பக்கிரிசாமி/ ஜனார்த்தனன் 81, எம், 11-16,மறைமலை நகர், காடம்பாடி, நாகப்பட்டினம். 8610100294 | 2021-2022 2023-2024 | 5280 | 098/016/900065 |
| 7 | 028 | 5105/2023 | எஸ். ராமாமிர்தம் 20,1743, நீலா கீழவீதி நாகப்பட்டினம் | 2023-2024 | 1200 | 098/028/900342 |

தீர்மானம் எண்.44
அ.கு.அனுமதிக்கப்பட்டது

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 8 | 031 | 4989/2023 18/12/2023 | பாஸ்கரன் 76, பெருமாள் வடக்குவீதி நாகப்பட்டினம் 9787820666 | 2018–2019 2023–2024 | 7300 | 098/031/901788 |
| 9 | 028 | 5106/2023 22/12/2023 | மீனாட்சி 96/47, நீலா வடக்கு வீதி, நாகப்பட்டினம்(9047719258) | 2020–2021 2023–2024 | 5280 | 098/028/900369 |
| 10 | 017 | 5298/2023 28/12/2023 | அறிவழகன் 3, குமரன் நகர் எதிர்புறம்,ஜீ.வி.ஆர், திருமணமண்டபம் வெளிப்பாளையம், நாகப்பட்டினம்(9443395064) | 2020–2021 2023–2024 | 3600 | 098/017/900596 |
| | | | மொத்தம் | | 43740 | |

| அலுவலககுறிப்பு | 1 | சில வரிவிதிப்புதாரர்களுக்கு பாதாள சாக்கடை இணைப்பு வழங்கப்படாமல் தவறாக கேட்பு எழுப்பப்பட்டு வசூலிக்க இயலாத நிலையில் உள்ள பாதாளசாக்கடை கட்டணம் தொகை ரூ. 43,740/– யை மட்டும் கேட்பிலிருந்து நீக்கம் (Write off) செய்திட மன்றம் அனுமதி வழங்கலாம் |
|---|---|---|

ந.க.எண். /2020/

22-02-2024

பொருள் எண்.22

நாகப்பட்டினம் நகராட்சியில் பிறப்பு மற்றும் இறப்பு பதிவு விவரம் பிரிவு 1 முதல் 4 பிரிவுகளில் ஜனவரி 2024 மாதம் பிறப்பு 115 இறப்பு 46 பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்யப்பட்ட விபரம் நகர்மன்றத்திற்கு பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது. பிறப்பு மற்றும் இறப்பு விபரம்01.01.2024 முதல் 31.01.2024

| பிரிவு | பிறப்பு | | இறப்பு | |
|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| 1 | 0 | 0 | 8 | 9 |
| 2 | 26 | 21 | 13 | 5 |
| 3 | 28 | 23 | 2 | 1 |
| 4 | 8 | 9 | 4 | 4 |
| **கூடுதல்** | **62** | **53** | **27** | **19** |
| | **115** | | **46** | |

| அலுவலககுறிப்பு | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம். |
|---|---|---|

ந.க.எண். 269/2024/எச்2

தீர்மானம் எண்.45
அ.கு.அனுமதிக்கப்பட்டது

22-02-2024

பொருள் எண்.23

நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் 15வது நிதிக்குழு மான்ய நிதி ( சுகாதாரம்) 2023–24ன் நாகூர் அரசு மருத்துவமனை கட்டிடம் கட்டுவதற்கு ரூ.500.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதனை தொடர்ந்து மேற்காணும் பணியினை மேற்கொள்வதற்கான உரிய நிர்வாக அனுமதி தொழில்நுட்ப அனுமதி பெறுவதற்கான விரிவான திட்ட மதிப்பீட்டு அறிக்கை வடிவமைப்பு மண் பரிசோதனை மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள தனியார் ஆலோசகர் மூலம் பணியினை மேற்கொள்வதற்கும் அதற்குண்டான கட்டணத்தினை தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டில் 1.5 சதவிகிதம் ஆலோசனை கட்டணத்தினை வழங்கிட 12.01.2024 அன்று நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்காணும் பணியினை மேற்கொள்ள வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு.

| வ.எண் | நிறுவனங்களின விவரம் | மதிப்பீட்டு விலை விகிதம் |
|---|---|---|
| 1 | M/S. TS ASSOCIATES. Door NO.1, Plot NO. 202. , 2nd Lane , 8th Cross Street, Ganesh Avenue, Sakthi Nagar, Porur, Chennai. | 2.0% |

தீர்மானம் எண்.46
அ.கு.அனுமதிக்கப்பட்டது

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>2</td><td>M/S. SPT Consultancy Services, No.3B, Vadvelu Street, Perambur, Chennai</td><td>1.8 %</td></tr>
<tr><td>3</td><td>M/s G.S Consultancy Services, No.2/55, LIG, 7th Floor, TNHB, Solinganallur , Chennai</td><td>1.50 %</td></tr>
</table>
மேற்காணும் நிறுவனங்களிலிருந்து வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/s.G.S Consultancy Services, Chennai நிறுவனத்தின் மதிப்பீட்டில் 1.50% சதவிகிதத்தினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><td>அலுவலககுறிப்பு</td><td>1</td><td>மன்றம் அனுமதி வழங்கலாம்.</td></tr>
<tr><td></td><td>2</td><td>மேற்காணும் பணியினை மேற்கொள்ள ஆகும் செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.</td></tr>
</table>
ந.க.எண். 2763/2023/இ1
</td>
<td></td>
</tr>
<tr>
<td>22-02-2024</td>
<td>பொருள் எண்.24<br>நகர்மன்ற உறுப்பினர் திருமதி.எஸ்.பதுருநிஷா அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மான நகல்–<br>➢ 2-வது வார்டுகுட்பட்ட ஜடையினா ஹாஜியார் தெரு, கலிபா சாஹிப்தெரு, செய்யது பள்ளி குளம் மேல்கரை பகுதிகளான கழிவுநீர்கால்வாய் மிகவும் மோசமான நிலையில் உள்ளது, இதனால் ரோட்டில் தண்ணீர் வெளிவருகிறது அதனை செப்பனிட்டு தரவும்,<br>➢ பெரிய கடைத்தெரு, பெரிய மினாரா கீழ்புறம் உள்ள இரண்டு ஸ்வீட் கடை சந்து பகுதியில் ஆட்டோ, பைக் போக்குவரத்து மோசமாக செல்வதால் மக்களுக்கு மிகவும் சிரமமாக உள்ளது, எனவே அவ்விடத்தில் தடுப்பனை தூண்கள் போஸ்டு அமைத்து தர இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.</td>
<td>தீர்மானம் எண்.47<br>தீர்மாணிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>22-02-2024</td>
<td>பொருள் எண்.25<br>நகர்மன்ற உறுப்பினர் திரு.எஸ்.கௌதமன் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மான நகல்–<br>➢ 13-வது வார்டுகுட்பட்ட மகாலெட்சுமி நகர், சுனாமி குடியிருப்பு பகுதியில் உள்ள மக்களுக்கு பகுதி நேர ரேசன் கடை அமைய துறை சார்ந்த வேலைகள் நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. ரேசன் கடைக்கான இடம் சர்வே செய்யப்பட்டுள்ளது, மகாலெட்சுமி நகரில் இரண்டு அங்கன்வாடி கட்டிடங்கள் ஒரே இடத்தில் உள்ளது . அதில் பயன்படுத்தாமல் உள்ள ஒரு இடத்தில் தற்காலிகமாக ரேசன் கடையை பயன்படுத்திக்கொள்ளலாம், மேற்படி தற்காலிக ரேசன் கடை அமைக்க துரை சார்ந்த அனுமதி பெற நடவடிக்கை எடுக்கவேண்டி இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.</td>
<td>தீர்மானம் எண்.48<br>தீர்மாணிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>22-02-2024</td>
<td>பொருள் எண்.26<br>நகர்மன்ற உறுப்பினர் திரு.E.S.M,சுரேஷ் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மான நகல்–<br>➢ 16--வது வார்டுகுட்பட்ட நம்பியார் நகர் பகுதியில் அமைந்துள்ள இரண்டு அங்கன்வாடிகளை சுற்றி சுற்றுச்சுவர் எழுப்புவதற்கும், அங்கன்வாடிகளை சுற்றி பேவர் பிளாக் மூலம் நடைபாதை அமைத்து தரவும், நடுவில் சிறுவர்கள் விளையாடுவதற்கு விளையாட்டு பூங்காவை அமைத்து தரவும்,<br>➢ நம்பியார் நகரில் விளையாட்டு மேடை அமைத்து தரவும்,<br>➢ நம்பியார் நகர் கடற்கரை பகுதியில் உயர் கோபுர மின் விளக்கு அமைத்து தர இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.</td>
<td>தீர்மானம் எண்.49<br>தீர்மாணிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>22-02-2024</td>
<td>பொருள் எண்.27<br>நகர்மன்ற உறுப்பினர் திரு.ஆர்.எ.டி.அண்ணாதுறை அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மான நகல்–<br>➢ 34-வது வார்டுகுட்பட்ட அம்மா கண்ணு தோட்டம் சாலை பழுதடைந்து உள்ளதால் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளது, அங்கு சிமெண்ட் சாலை அமைத்து தரும்படி இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.</td>
<td>தீர்மானம் எண்.50<br>தீர்மாணிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 22-02-2024 | பொருள் எண்.28<br>**நகர்மன்ற உறுப்பினர் திரு.த.கமலநாதன் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மான நகல்–**<br>➢ 35-வது வார்டுகுட்பட்ட கோட்டைமேட்டுதெருவில் இயங்கி வந்த நகராட்சி தொடக்கப்பள்ளி மற்றும் அங்கன்வாடி கட்டிடம் மிகவும் பழுதடைந்து எப்பொழுது வேண்டுமானாலும் உடைந்து விழுந்து விடும் என்ற நிலையில் உள்ளது. ஆகையினால் அந்த கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்தி தரும்படி கேட்டுக்கொள்கிறேன்,<br>➢ மேலும் அதே இடத்தில் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக சமுதாய கூடம் அமைத்து தரும்படியும் இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன் | தீர்மானம் எண்.51<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 22-02-2024 | பொருள் எண்.29<br>**நகர்மன்ற உறுப்பினர் திரு.த.கமலநாதன் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மான நகல்–**<br>➢ 35-வது வார்டுகுட்பட்ட காமராஜர் நகர், இரண்டாவது தெருவில் குடியிருப்பு வீடுகளில் பாதி வீடுகளுக்கு பாதாள சாக்கடை இணைப்பு வழங்காமல் இருப்பதால் அந்த வீடுகளுக்கு பாதாள சாக்கடை இணைப்பு வழங்கிடமாறு கேட்டுக்கொள்கிறேன்,<br>➢ மேலும் காமராஜர், சேவாபாரதி இணைப்பு பகுதியில் உள்ள பாதாள சாக்கடை தொட்டியில் உள்ள பைப்லைன் உடைந்து விட்டதால் அதனை சரிசெய்து தரும்படியும் பாதாள சாக்கடை தொட்டிகளில் மணல் அடைந்து இருப்பதாலும் அதனை தூர்வாரி தரும்படியும் இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண்.52<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 22-02-2024 | பொருள் எண்.30<br>**நகர்மன்ற துணைத் தலைவர் திரு.M.R.செந்தில்குமார் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மான நகல்–**<br>➢ -நமது மண்ணின் மைந்தர், மாநிலத்தை ஐந்து முறை ஆண்ட முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நினைவகமும், பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவகத்தையும் புனரமைத்து சிறப்பாக வரும் பிப்ரவரி 26ம் தேதி மக்களின் பார்வைக்கு திறந்துவைக்க இன்று சட்டசபையில் அறிவித்த தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்க இம்மன்றம் தீர்மானம் நிறைவேற்றுகிறது. | தீர்மானம் எண்.53<br>தீர்மாணிக்கப்பட்டது |

/உண்மை நகல்/

(ஒம்) இரா.மாரிமுத்து
நகரமன்ற தலைவர்